**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 103 /2020 PW . 6**

| | |
|---|---|
| பெயர் : ஆண்டி | தந்தை/கணவர் பெயர்: குறுந்தன் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

<u>12.02.2026 முதல் விசாரணை:</u>

1.நான் மருதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி உள்ள கையொப்பங்கள் என்னுடையது தல்ல. நான் எந்த கையொப்பமும் போடவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. கடந்த 22.05.2020ம் தேதி 08.00 மணியளவில் உரத்துப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் நானும் , எங்கள் ஊர் முருகேசனும் நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகளை உலகம்பட்டி ஆய்வாளர் 08.30 மணிக்கு விசாரித்த போது அவர்களாக கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அதனடிப்படையில் சுமார் 69 செ.மீ நீளமுள்ள கருவேல் உருட்டு கட்டை–1, சுமார் 13 செ.மீ மரக்கைப்பிடியுடன் கூடிய சுமார் 35 செ.மீ இரும்பு பகுதி கொண்ட அரிவாள் –1, TN55 AF4069 இரு சக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரில்ல.